முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1281

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

02.04.2023, ஞாயிற்றுக்கிழமை

1. ஓங்காரக்குடில் படைத்த அரங்கா
ஓங்கார வழிநடத்தும் ஞானதேசிகா
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் இனிதே உமக்கு
ஓதிடுவேன் ஞான அறிவுரை ஆசி
2. ஆசியதும் சுபகிருது சேல் திங்கள்
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 19 ம் நாள், 02.04.2023, ஞாயிற்றுக்கிழமை)
அரங்கனுக்கு ஆற்றல் பெருக உரைப்பேன்
வாசிவென்ற ஞானியர்படைகள் எல்லாம்
வல்லமைகூட்டி உமக்கு துணையாய் நிற்க
3. நிற்கவே ஆறுமுகன் யானும்
நிலமதனில் உந்தனுள் இருந்து இயக்க
அற்புதம்பட உன் சேவை உயரும்
அகிலமே ஏற்று அமைதி பாதுகாப்பைப்பெறும்
4. காப்பு தரவல்ல கருணைமிக்க
கலியுகத்தில் ஜீவகாருண்ய வழிகாட்டும்
உன்வழியை ஒப்புகொண்டு உலகோர் வந்தால் போதும்
உலகத்துக்கு நல்ல பாதுகாப்பு உண்டாகும்
5. ஆகவே அரங்கனே முருகனே என
அகிலமதில் எங்கு ஜெபதபம் நடக்கின்றதோ
வகையாக அங்கெல்லாம் ஞானியர்களை அனுப்பி
வடிவேலன் யான் வழி நடத்தி வருகின்றேன்
6. வருகின்ற இந்த படைகள் வையகமெங்கும் மிகுதி படபட
உலகமெல்லாம் நல்ல தலைமைகளாகவும் உயிர்களை காக்கவல்ல
உன்னதமான உண்மைபட ஆளுமை நடத்துகின்ற மாற்றமாக
உலகம் காணக்கூடும் மண்ணுலகில் அற்புதமும் நிகழக்கூடும்

7. கூடவே சர்வ மாற்றத்துக்கும் குறையில்லா அரங்கன் ஓங்காரக்குடிலில்
அற்புதம் நடத்தும் சபையாக இருக்க
அகிலத்தார் உணர்ந்து குடிலுக்கு வந்தால் போதும்
உலகமெல்லாம் பாதுகாப்பும் ஞானபலமுமாக மாற்றங்கண்டு
மேன்மைகொள்ளும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–